முருகப்பெருமான் துணை

**மகான் யோகானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.01.2023, திங்கட்கிழமை

1. யோக ஞானியே ஞான தேசிகா
 உயர்வாழ்வாம் ஞான வாழ்வு
 செகத்தினில் மக்கள் அனைவருக்கும்
 சித்தியாக அருளவந்த அரங்கா
2. அரங்கனே உன்பெருமை கூறி
 அகிலமதில் சுபகிருது கலை திங்கள்
 வரங்களென ஈராம் திகதி சோமவாரம்
 (சுபகிருது வருடம் தை மாதம் 02 ம் நாள் 16.01.2023, திங்கட்கிழமை)
 வழங்குவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை யோகானந்தர் யானும்
 அருளுவேன் உலகோர் நலம்பெற
 ஆசிதந்து உலக மக்களை மீட்க
 ஆறுமுகனார் சக்தியாக வந்தநல்
4. வந்தநல் அரங்கன் உபதேசங்களை
 வணங்கி ஏற்று மக்களெல்லாம்
 சிந்தை வைத்து செபதபம் ஆக
 சித்தர்கள் பூசை நாளும் செய்திட
5. செய்திட வினைகள் விலகி
 சித்திகளாக காரிய வெற்றி
 அய்யமற குருவருளால் காணும்
 அரங்கன் ஞானபலம் அறிந்து வர
6. வருகவே மனத்தெளிவு திடம்
 வறுமையை விரட்டும் பலம்
 தருமத்தை காக்கும் செய்திடும்
 தகுதிநிலை மேலோங்கி இனிதே
7. இனிதே முருகப்பெருமானின்
 இணையிலா சக்தியும் கிட்டி
 கனிவேலன் காட்சி அடைந்தும்
 கலியுக ஞானிகளாக மக்கள்
8. மக்கள் அரங்கன் வழிக்கு வர
 மண்ணுலகின் அழிவை தடுத்து
 ஆக்கமுடன் வளர்ச்சிநிலை காட்டும்
 அழியாமை பெற்றவர்களாக ஞானவான்களாக
9. ஆகவே தேறி உலகமெங்கும்
 அற்புதம் தனை படைப்பர்
 மகான் அவதாரம் உலகமெலாம்
 மகத்துவம்பட தெரிவிக்கப்பட்டு

10. பட்டுமே மத இன பேதம் கடந்து
பாருலகை ஒன்று சேர்க்கும்
சட்டமாக சன்மார்க்க விதிகள்
சற்குரு அரங்கனால் வேதமாகி

11. ஆகியே உலகெங்கிலும் பரவியே
ஆற்றல்மிக்க ஞானத் தலைமைகளாகி
அகிலம் கண்டு ஞான ஆட்சி
ஆறுமுகனார் ஆசிபட நடந்தேறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–